09.09.2025

O.S.No. 401/2019

PW3– அண்ணாமலை– த/பெ. முத்துசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.09.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் நீதிமன்றத்தில் இருந்து பெறப்பட்ட அழைப்பாணையின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவரவில்லை என்றால் சரிதான். நான் 2ம் வாதி கேட்டுகொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். முதல்விசாரணை வாக்குமூலம் நான் சொன்னதன் அடிப்படையில் தயார் செய்யப்படவில்லை, எழுதியிருந்தது அதில் நான் கையொப்பம் செய்தேன். புல எண்.480/29/1டி தாவா சொத்தாகும். தாவா சொத்து ஆதியில் சங்கரபாண்டிதேவர் மகன் அருணகிரி தேவருக்கு பாத்தியப்பட்டது. அருணகிரிதேவர் பெயரில் பட்டா உள்ளது, ஆனால் பட்டா எண் எனக்கு தெரியாது.

2. 1,2 வாதிக்கு அருணகிரிதேவர் 2016 வாக்கில் எழுதிக்கொடுத்த ஆவணம் என்ன என்றால் கிரைய ஆவணம். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். தாவா சொத்துக்கான எல்கைமால் தென்பக்கம் ஆதிமூலத்தேவர், கீழ்பக்கம் ராமலிங்கத்தேவர், வடபக்கம் சண்முகத்தேவர், மேல்பக்கம் பன்னீர்முத்துதேவர் இடம் உள்ளது.

3. 2016 ஆவணத்தில் எவ்வளவு சொத்து எழுதிக்கொடுத்தார் என்றால் எனக்கு சரியாக தெரியாது, நிறைய சொத்துஎழுதிக்கொடுத்தார். 1ம் வாதி, அரவிந்த் என்பவருக்கு 6 செண்ட் கிரையம் எழுதிக்கொடுத்தார்.

தாவா சொத்துக்கு பன்னீர்முத்து தேவர் இடத்திற்கு அடுத்தமேல்பக்கம் எனக்கு பாத்தியப்பட்ட இடம் இருந்தது, அதை நான் கிரையம் கொடுத்துவிட்டேன், எனது இடம் சர்வே எண்.480/22 ல் இருந்தது.

4. பிரதிவாதி எப்போது இடையூறு செய்தார் என்றால் 5,6 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இடையூறு செய்தார். அவர் என்ன மாதிரி இடையூறு செய்தார் என்று எனக்கு தெரியாது. 1ம் வாதி, அரவிந்த்–க்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. எனக்கு தாவா சொத்துக்கு அருகாமையில் இடம் இல்லை, அதற்கான எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்பதால் என்றால் சரியல்ல. வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே நான் சமாதானம் பேசவில்லை. வாதிகளிடம் தொகை வாங்கிவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.